**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சாத்தான்குளம்.**
**முன்னிலை : செல்வி.ம.வி.தேவி ரக்ஷா, B.B.A.,LL.B (Hons).,**
**நீதித்துறை நடுவர், சாத்தான்குளம்**
**2026 ஆம் ஆண்டு, ஜுலை மாதம் 21 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை**
**Crl.M.P.No.776 of 2026**
*********

லிங்கத்துரை (வயது 61/26),
த/பெ. ஜேசுவடியான்,
6/192, பெருமாள்புரம், பூச்சிக்காடு,
அரசூர் கிராமம்,
சாத்தான்குளம். ...மனுதாரர்/வாகன உரிமையாளர்/எதிரி

...எதிர்...

**அரசுக்காக :-**
காவல் உதவி ஆய்வாளர்,
தட்டார்மடம் காவல் நிலையம்,
குற்ற எண்.118/2026,
பி.ஆர்.எண்.169/2026. ...எதிர்மனுதாரர்/குற்றமுறையீட்டாளர்

இம்மனுவானது இந்நீதிமன்றம் சி.ஆர்.எம்.பி.எண்.702/2026, 30.06.2026 இல் பிறப்பித்த வழக்கு சொத்து இடைக்கால உத்தரவு நிபந்தனையை (Condition Modification) மாற்றம் செய்யக்கோரி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனுதாரர் வழக்கறிஞர் : செல்வி. பாலவினிதா

எதிர்மனுதாரர் வழக்கறிஞர் : திருமதி. ப்ரீத்தி ராணி, அரசு குற்றவியல் வழக்கறிஞர்

**உத்தரவு**

1. மனுதாரர்/வாகன உரிமையாளர்/எதிரி, அவருக்கு சொந்தமான TN 69 BA 6414 என்ற பதிவெண் கொண்ட மஞ்சள், கறுப்பு நிற ஆட்டோ வாகனத்தை (Engine No.BHZWFG04298, Chassis No. MD2A28AZ4FWG04342) இடைக்காலமாக திரும்ப கேட்டு மனு தாக்கல் செய்து சி.ஆர்.எம்.பி.எண்.702/2026 ஆனது கடந்த 30.06.2026 ஆம் தேதியன்று அனுமதிக்கப்பட்டதாகவும், மேற்படி உத்தரவில் மனுதாரர் ரூ.1,50,000/-க்கு சொந்தபிணையும் அதே தொகைக்கு ஒரு தனிநபர் பிணையும் வழங்க வேண்டும் என்று இந்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது என்றும், ஆனால் மனுதாரரால் ரூ.1,50,000/- மதிப்பிற்கு ஒரு தனிநபர் பிணையை தயார் செய்ய முடியவில்லை என்றும், தற்போது ரூ.75,000/- மதிப்பில் மொத்தம் 2 தனிநபர் பிணையை ரூ.1,50,000/- தொகைக்கு தாக்கல் செய்ய தயாராக உள்ளதாகவும், அதனால் கடந்த 30.06.2026 ஆம் தேதியன்று சி.ஆர்.எம்.பி.எண்.702/2026 இல் பிறப்பித்த உத்தரவை மாற்றம் செய்ய வேண்டியது நீதியின் பொருட்டு அவசியமாக உள்ளது என்றும், அவ்வாறு மேற்படி உத்தரவை மாற்றம் செய்து உரிய உத்தரவு வழங்காத பட்சத்தில் மனுதாரருக்கு மிகுந்த கஷ்ட நஷ்டம் ஏற்பட வாய்ப்புள்ளது என்றும், எனவே, சி.ஆர்.எம்.பி.எண்.702/2026, 30.06.2026 இல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவான

DEVI RAKSHA M V
Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2026.07.21 15:37:55 +0530

ரூ.1,50,000/-க்கு ஒரு தனி நபர் பிணை என்பதில் இருந்து 1,50,000/-க்கு 75,000/-வீதம் 2 பிணையதாரர்கள் என மாற்றம் செய்து உத்தரவு பிறப்பிக்குமாறு மனுதாரர் தரப்பில் கூறி, இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. இந்த வழக்கின் சொத்தான TN 69 BA 6414 என்ற பதிவெண் கொண்ட மஞ்சள், கறுப்பு நிற ஆட்டோ வாகனத்தை (Engine No.BHZWFG04298, Chassis No. MD2A28AZ4FWG04342) அதன் உரிமையாளரிடம் ஒப்படைத்தால், இது போன்ற குற்ற செயலில் ஈடுபடக்கூடும் என்றும், அவர் வழக்கின் சொத்தினை வழக்கு விசாரணையின்போது நீதிமன்றத்தில் ஆஜர் செய்யமாட்டார் என்றும் கூறி, எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சேபனை செய்யப்பட்டது.

3. இரு தரப்பிலும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் அனைத்தும் கவனமாக பரிசீலிக்கப்பட்டன. மனுதாரருக்கு சொந்தமான TN 69 BA 6414 என்ற பதிவெண் கொண்ட மஞ்சள், கறுப்பு நிற ஆட்டோ வாகனத்தை (Engine No.BHZWFG04298, Chassis No. MD2A28AZ4FWG04342) இடைக்காலமாக திரும்ப கேட்டு மனு தாக்கல் செய்து சி.ஆர்.எம்.பி.எண்.702/2026 இல் கடந்த 30.06.2026 ஆம் தேதி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதும், மேற்படி உத்தரவில் ரூ.1,50,000/-க்கு ஒரு தனிநபர் பிணை வழங்க வேண்டும் என்று நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளதும் தெரிய வருகிறது. மனுதாரரால் ரூ.1,50,000/- மதிப்பிற்கு ஒரு தனி நபர் பிணையதாரரை தயார் செய்ய முடியவில்லை என்றும், தற்போது ரூ.75,000/- மதிப்பில் மொத்தம் 2 பிணையதாரர்களாக ரூ.1,50,000/- தொகைக்கு பிணை தாக்கல் செய்ய தயாராக உள்ளதாக தெரிவித்துள்ளார். மனுதாரரின் குடும்பம் அவருடைய வருமானத்தை நம்பி உள்ளதை கருத்தில் கொண்டும், மனுதாரரின் சூழ்நிலையை கருத்தில் கொண்டும் சி.ஆர்.எம்.பி.எண்.702/2026 இல் கடந்த 30.06.2026 ஆம் தேதி பிறப்பித்த உத்தரவின் ஒன்றாவது நிபந்தனையான மனுதாரர்/வாகன உரிமையாளர்/எதிரி ரூ.1,50,000/-க்கு சொந்த பிணையும் அதே தொகைக்கு ஒரு தனி நபர் பிணையும் எழுதிக் கொடுக்க வேண்டும் என்ற நிபந்தனை மட்டும் மனுதாரர்/வாகன உரிமையாளர்/எதிரி ரூ.1,50,000/-க்கு சொந்த பிணையும் அதே தொகைக்கு ரூ.75,000/- மதிப்பில் இரண்டு தனி நபர் பிணையும் எழுதிக் கொடுக்க வேண்டும் என்று மாற்றி உத்தரவிடப்படுகிறது.

முடிவில், இந்த மனு அனுமதிக்கப்படுகிறது.

சி.ஆர்.எம்.பி எண்.702/2026 இல் 30.06.2026 ஆம் தேதி பிறப்பித்த உத்தரவு படி மனுதாரர்/வாகன உரிமையாளர்/எதிரி ரூ.1,50,000/-க்கு சொந்த பிணையும் அதே தொகைக்கு ஒரு தனி நபர் பிணையும் எழுதிக் கொடுக்க வேண்டும் என்ற நிபந்தனை மட்டும் மனுதாரர்/வாகன உரிமையாளர்/எதிரி ரூ.1,50,000/-க்கு சொந்த பிணையும் அதே தொகைக்கு ரூ.75,000/- மதிப்பில் இரண்டு தனி நபர் பிணையும் எழுதிக்

DEVI RAKSHA M V

Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2026.07.21 15:38:00 +0530

கொடுக்க வேண்டும் என மாற்றி உத்தரவிடப்படுகிறது. மற்ற நிபந்தனைகளில் எந்த மாற்றமும் இல்லை.

இந்த உத்தரவு, என்னால் இன்று 21.07.2026 ஆம் தேதி திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

DEVI RAKSHA M V

Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2026.07.21 15:38:02 +0530

நீதித்துறை நடுவர்,
சாத்தான்குளம்.

Visit **ecourts.gov.in** for updates or download mobile app "**eCourts Services**" from Android or iOS